**IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, AVINASHI.**

Judicial form No.53
(See Rule 42)

DEPOSITION OF WITNESS

**CC.No.188/2024**

PW-1

| | | | |
|---|---|---|---|
| Name | ரவிசங்கர்(PW1) | | |
| Father's Name | ஆறுச்சாமி | தொழில் | சூப்பர் மார்க்கெட் முதலாளி |
| Village | கருவலூர் | | |
| Taluk | அவிநாசி | Age | 36 |
| District | திருப்பூர் | | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th **day of April 2026** by Thiru. K. Kulanthaivel, Magistrate Clerk, JM Court, Avinashi by following the direction of Officer of this Court.

*(Accused Present)*

**முதல் விசாரணை:-**

நான் மேற்படி முகவரியில் குடியிருந்து கொண்டு சொந்தமாக தொழில் செய்து வருகிறேன். கடந்த 13.3.24 ஆம் வருடம் இரவு 09.30 அளவில் நான் கடையை க்ளோஸ் செய்தேன். மறுநாள் காலை 6:30 மணி அளவில் எப்பவும் போல் கடையை திறந்து பார்த்தபோது என்னுடைய தொலைபேசியும் கல்லாப்பெட்டியில் ரூபாய் 2000 காணாமல் போய் இருந்தது. என்ன நடந்தது என்பதை பார்ப்பதற்காக கடையை சுற்றி பார்த்த போது பின்னால் இருந்த கடைக்கு மேல் பக்கம் போட்டிருந்த ரூபிங் ஷீட் பிரிக்கப்பட்டிருந்ததை தெரிந்து கொண்டேன். அதன் பின்பு நான் அவிநாசி காவல் நிலையம் சென்று காலை 11.00 மணி அளவில் புகார் கொடுத்தேன். என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். புகார் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. பின்பு போலீசார் என்னுடைய கடைக்கு மதியம் 2 மணி அளவில் வந்து பார்த்தார்கள். இரண்டு மாதங்கள் கழித்து போலீசார் எனக்கு என் கடையில் திருடு போன மொபைல் போன் கிடைத்து விட்டதாக தகவல் சொன்னார்கள் .நான் காவல் நிலையம் வந்து போனை பார்த்துவிட்டு அது என்னுடைய போன் என்று அடையாளம் காண்பித்தேன். தொலைந்து போன பணம் எனக்கு கிடைக்கவில்லை. போலீசார் என்னை விசாரித்தனர்.

**குறுக்கு விசாரணை எதிரி தரப்பில் :**

நான் எம்பிஏ படித்துள்ளேன். என்னுடைய வீட்டிற்கும் நான் வைத்திருக்கும் சூப்பர் மார்க்கெட் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் மூன்று கிலோ மீட்டர்

தூரம் இருக்கும். நான் சூப்பர் மார்க்கெட் வைத்திருக்கும் கடை சொந்தக்கடையா என்றால் இல்லை வாடகைக்கு எடுத்துள்ளேன். நான் சூப்பர் மார்க்கெட் வைத்து நடத்துவதற்கு அனுமதி பெற்றதை காண்பிப்பதற்கு காவல்துறையினரிடம் அதன் சான்றிதழை காண்பித்தேனா என்றால் இல்லை. தொலைந்து போன மொபைல் போன் என்னுடையது என்பதை காட்டுவதற்கு நான் ஏதேனும் ரசீதுகள் கொடுத்தேனா என்றால் தொலைபேசி வாங்கினதற்கான அசல் ரசீதை காவல் துறையிடம் ஒப்படைத்தேன். நான் கொடுத்த புகாரில் மொபைல் போனில் IMEI நம்பர் குறிப்பாக எழுதப்படவில்லை என்றால் சரிதான், அதன் ரசீதை கொடுத்து இருப்பதால் எழுதவில்லை. நான் கொடுத்த புகாரில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் சரியல்ல குறிப்பிட்டுள்ளேன். என்னுடைய புகாரில் தேதி குறிப்பிடப்படவில்லை என்றும் நான் வழக்கிற்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல . நான் சூப்பர் மார்க்கெட்டை கடந்த ஆறு வருடங்களாக வைத்துள்ளேன். 2000 ரூபாய் பணத்திற்கான டினாமிநேஷனை நான் புகாரில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் கொடுத்த புகாரில் மேற்கூரை பிரிக்கப்பட்ட நிலையில் இருந்தது என்று எந்த ஒரு சங்கதியும் இல்லை என்றால் சரிதான் சிசிடிவி footage கொடுத்ததால் நான் அதை குறிப்பிடவில்லை. நான் கொடுத்த புகாரில் தொலைந்து போன தொலைபேசி எண் நிறம் மற்றும் அதன் மாடல் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். அந்த தொலைபேசி சூப்பர் மார்க்கெட்டுக்காக வாங்கப்பட்டதா அல்லது என்னுடைய தனிப்பட்ட உபயோகத்திற்காக வாங்கப்பட்டது என்றால் என்னுடைய தனிப்பட்ட உபயோகத்திற்காக வாங்கப்பட்டது. நான் கொடுத்த புகாரில் அந்த தொலைபேசியில் போடப்பட்டிருக்கும் தொலைபேசி எண் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். கடையில் இருந்த கல்லாப்பெட்டி இரும்பால் ஆனதா மரத்தால் செய்யப்பட்டதா என்றால் மரத்தால் செய்யப்பட்டது. இரவு நான் செல்லும்போது அதை பூட்டி விட்டு சென்றேனா என்றால் இல்லை. கல்லாப்பெட்டி இருந்த இடத்தில் காவல்துறையினர் கைரேகை நிபுணரை அழைத்து வந்து அதன் பதிவுகளை எடுத்தார்களா என்றால் இல்லை. என்னுடைய கடைக்கு முன்னும் பின்னும் இரு கேட்டுகள் உள்ளதா என்றால் சரிதான். இரு கேட்டுகளில் போடப்பட்டிருந்த பூட்டுகள் உடைக்கப்பட்ட நிலையில் இருந்ததா என்றால் கடைக்கு பின்னால் இருக்கும் கேட்டிற்கு பூட்டு போடாமல் தான் இருந்தது அதன் தாழ்ப்பாள் மட்டும் திறந்த நிலையில் இருந்தது. என்னுடைய கடையிலிருந்து ரூபிங் ஷீட்டை போலீசார் கைப்பற்றினார்களா என்றால் இல்லை. என்னுடைய கடைக்கு பின்னால் காலியிடம் உள்ளது என்றால் சரிதான். கடையின் உயரம் எவ்வளவு இருக்கும் என்றால் 15 அடி உயரம் இருக்கும். என்னுடைய கடையின் சைடு பக்கத்தில் மற்ற கடைகள் உள்ளது. நான் சொன்ன நேரத்தில்தான் முதல் தகவல் அறிக்கையே பதிவு செய்யப்பட்டுள்ளது என்றும் நான் சொன்ன நேரத்தில் போலீசார் சம்பவ இடத்திற்கு வரவில்லை என்றால் சரியல்ல. புகார் கொடுப்பதற்காக நான் மட்டும்தான் காவல் நிலையம் சென்றேன். தொலைந்து போன தொலைபேசியை நான் இன்னும் பெற்றுக்கொள்ளவில்லை. என்னிடம் அந்த போனில்

இருந்த சிம்மை காவல் துறையினர் காண்பித்தார்களா என்றால் இல்லை. நான் சொன்ன நேரத்தில் சொன்ன தேதியில் திருட்டு சம்பவம் எதுவும் நடைபெறவில்லை என்றும் அந்த பொருள் என்னுடையது என்றிருந்தால்அதன் உடைமையை நான் பெற்றிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.கடை இருக்கும் இடம் அதிகமான போக்குவரத்து இருக்கும் இடம் என்றும் அதனால் நான் சொல்லும் சம்பவம் அங்கு நடைபெற்று இருக்காது என்றால் சரியல்ல.

**மறுவிசாரணைஇல்லை:**

| | |
|---|---|
| சாட்சியின் கையொப்பம் | திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.<br><br>(Sd.) N.Keerthana<br>குற்றவியல் நீதித்துறை நடுவர், அவிநாசி. |